பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**19 03 2026 THURSDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மேற்காசிய பகுதியில் அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாக பிரதமர் திரு நரேந்திர மோடி, பிரான்ஸ், ஓமன், மலேசியா நாட்டு தலைவர்களுடன் தொலைபேசி மூலம் ஆலோசனை நடத்தினார்.

2. ட்ரோன் உற்பத்தியில் உலகளாவிய மையமாக இந்தியாவை மாற்ற நடவடிக்கை எடுத்து வருவதாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. மின்சாரம் என்பது எதிர்காலத்திற்கான வளர்ச்சிப்பாதை என்று மத்திய மின்துறை அமைச்சர் திரு மனோகர்லால் கூறியுள்ளார்.

4. குழாய் மூலம் விநியோகிக்கப்படும் சமையல் எரிவாயு மற்றும் வாகனங்களில் பயன்படுத்தப்படும் CNG எரிவாயு போதிய அளவு கையிருப்பில் இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

5. Orleans மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் எம் ஆர் அர்ஜூன் — ஹரிஹரன் அம்சகருணன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-- இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>>

மேற்காசிய பகுதியில் அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாக பிரதமர் திரு நரேந்திர மோடி, பிரான்ஸ், ஓமன், மலேசியா நாட்டு தலைவர்களுடன் தொலைபேசி மூலம் ஆலோசனை நடத்தினார்.

இதுதொடர்பாக பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஓமன் நாட்டுத் தலைவர் **Haitham Bin Tariq**-வுடன் வளைகுடா பகுதியில் அமைதியை கொண்டுவருவதற்கு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தியதாக தெரிவித்துள்ளார்.

ஓமன் நாட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவிப்பதாக அவர் கூறியுள்ளார்.

அப்பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கான இந்தியர்களை பாதுகாப்பாக தாயகம் கொண்டுவர உதவியதற்கு ஓமன் நாட்டுக்கு நன்றி தெரிவிப்பதாக பிரதமர் கூறியுள்ளார்.

மேற்காசிய பகுதியில் அமைதியை நிலைநாட்டுவது குறித்து மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிமுடன் அவர் விவாதித்ததாக கூறியுள்ளார்.

அப்பகுதியில் நிலவும் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வுகாண நடவடிக்கை எடுப்பது குறித்து ஆலோசித்ததாகவும் கூறியுள்ளார்.

மேற்காசியப் பகுதியில் உடனடியாக அமைதியை கொண்டுவருவது குறித்து பிரான்ஸ் அதிபர் திரு இமானுவெல் மெக்ரானுடன் தொலைபேசி மூலம் ஆலேசனை நடத்தியதாக பிரதமர் கூறியுள்ளார்.

இரு நாடுகளும் ஒருங்கிணைந்து அப்பகுதியின் அமைதிக்காக முயற்சிகள் மேற்கொள்ளும் என்று திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

ட்ரோன் உற்பத்தியில் உலகளாவிய மையமாக இந்தியாவை மாற்ற நடவடிக்கை எடுத்து வருவதாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தேசிய பாதுகாப்பு தளவாட தொழில் நிறுவன மாநாட்டில் உரையாற்றிய அவர், இத்துறையில் தன்னிறைவை அடைவதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

நாட்டின் ராணுவ தளவாட உற்பத்தித் துறையில் சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்காற்றி வருவதாக அவர் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக்ஸ் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பத்தில் இந்த தொழில் நிறுவனங்கள் சிறப்பாக செயலாற்றி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

ராணுவ தளவாட தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டுக்காக அரசு உறுதிபூண்டிருப்பதாக திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

உயிரி பொருளாதாரத்தில் இந்தியா 195 பில்லியன் டாலர் அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சி கவுன்சில் நிறுவன நாள் விழாவில் உரையாற்றிய அவர், கடந்த பத்தாண்டுகளில் நாட்டின் உயிரி பொருளாதாரம் 20 மடங்கு அதிகரித்துள்ளதாக கூறினார்.

வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் நாட்டின் உயிரி பொருளாதாரம் 300 பில்லியன் டாலர் அளவுக்கு அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக திரு ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மின்சாரம் என்பது எதிர்காலத்தின் வழிகாட்டி என்று மத்திய மின்துறை அமைச்சர் திரு மனோகர்லால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்திய மின்சார உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர், நாட்டில் மின்சாரம் பிற நாடுகளைவிட குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருவதாக கூறினார்.

ஒரே சூரியன் — ஒரே உலகம் — ஒரே மின் பகிர்மானத் திட்டத்தின்கீழ், ஐக்கிய அரபு எமிரேட்டுடன் இணைந்து கடலுக்கு அடியில் மின்பகிர்மான கேபிள் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த பத்தாண்டுகளில் மத்திய அரசு 2 லட்சம் கிலோமீட்டர் தூரத்தில் மின்பகிர்மான இணைப்பு அமைக்கப்பட்டதாக அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி, மின்னணு உற்பத்தி 11 லட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

இத்துறையில் தற்போது 300 உற்பத்தியாளர்கள் செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

<<<<<<>>>>>>

சட்டப்பேரவைத் தேர்தலில் முதியோர், மாற்றுத் திறனாளிகள், தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்கள் தபால் மூலம் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

தேர்தல் ஆணையம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், **85** வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் படிவம் **12 D** -ஐ பய்னபடுத்தி, வாக்குச்சாவடி நிலை அலுவலர் மூலம் தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறியுள்ளது.

வாக்கு சேகரிக்கும் குழுக்கள் இந்த வாக்காளர்களின் வீடுகளுக்கே சென்று வாக்குகளை சேகரிப்பார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

இதற்கான கால அட்டவணை தேர்தல் நடத்தும் அலுவலர்களால் தயாரிக்கப்பட்டு, வேட்பாளர்களுக்கும் இந்த தகவல் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடைபெறும் தேதிகளில் அத்தியாவசியப் பணிகளில் ஈடுபட உள்ள வாக்காளர்கள் தங்கள் துறையின் ஒருங்கிணைப்பு அலுவலர் மூலம் தபால் வாக்கு வசதிக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

தீயணைப்புத்துறை, சுகாதாரம், மின்சாரம், ஆம்புலன்ஸ் சேவைகள், விமான போக்குவரத்து, அரசு சாலை போக்குவரத்துக்கழகங்கள் போன்றவை இந்த வசதியின்கீழ் வருவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கும் தபால் வாக்கு வசதி அளிக்கப்படும்.

<<<<<<>>>>>>

குழாய் மூலம் விநியோகிக்கப்படும் சமையல் எரிவாயு மற்றும் வாகனங்களில் பயன்படுத்தப்படும் CNG எரிவாயு போதிய அளவில் இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பெட்ரோலியத்துறை இணைச்செயலர் திருமதி சுஜாதா சர்மா, இருவாரங்களில் ஒரு லட்சத்து 25 ஆயிரம் குழாய் சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கடந்த மூன்று தினங்களில் மட்டும் ஐந்தாயிரத்து 600 நுகர்வோர்கள் குழாய் மூலமான சமையல் எரிவாயு இணைப்புக்கு மாறியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

வணிக பயன்பாட்டுக்காக குழாய் மூலம் எரிவாயு வழங்கும் திட்டத்தை விரிவாக்கம் செய்து வருவதாக கூறிய அவர்,

இதுதொடர்பாக அனைத்து மாநில அரசுகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சமையல் எரிவாயுவை பதுக்கிவைப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு, மத்திய அரசு கடிதம் எழுதியுள்ளதாகவும் திருமதி சுஜாதா சர்மா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

வளைகுடா பகுதியில் எண்ணெய் கிடங்குகள் மீதான தாக்குதல் கவலையளிப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், இந்த தாக்குதல் மூலம் உலக அளவில் எரிசக்தி பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளதாக தெரிவித்தார்.

எண்ணெய் கப்பல் போக்குவரத்து தடைபட்டுள்ளதால், கச்சா எண்ணெய் உள்ளிட்ட எரிபொருட்களின் இறக்குமதி பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

நாட்டில் சமையல் எரிவாயு விநியோகத்தை கண்காணித்து வருவதாக கூறிய திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், வீடுகளுக்கு சமையல் எரிவாயு விநியோகம் செய்ய முன்னுரிமை அளித்து வருவதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

**Hormuz** நீரிணையில் **622** மாலுமிகளுடன் இந்தியாவின் **22** கப்பல்கள் சிக்கியிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த கப்பல் நிறுவனங்களுடன் தொடர்பில் இருப்பதாக கூறிய வெளியுறவு அமைச்சகம், இவர்களை பாதுகாப்பாக கொண்டுவர நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களை சேர்ந்த ஏராளமான மாணவர்கள் ஈரானில் மருத்துவப்படிப்பு பயின்று வருவதாகவும், இவர்களின் பாதுகாப்புக்காக அந்நாட்டுடன் கலந்து ஆலோசித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் எல்லையை கடந்து பிற நாடுகள் வழியாக இந்தியா வர விரும்புவர்கள் வெளியுறவு அமைச்சகத்தை தொடர்பு கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

ஈரான் மீது கடுமையான தாக்குதல் நடத்தப்படும் என்று அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் **Pete Hegseth** தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அமெரிக்காவின் விதிமுறைகளுக்கு ஏற்ப இந்த பிரச்சினை முடிவுக்கு கொண்டுவரப்படும் என்றார்.

ஈரான் மீதான தாக்குதலில் அமெரிக்காவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்று அவர் தெரிவித்தார்.

ஈரானின் ஏவுகணை தளங்களை முறியடிப்பது, ராணுவ தளவாட தொழில் மையங்களையும், ஈரான் கடற்படையையும் தாக்குவது, ஈரான் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதை தடை செய்வது உள்ளிட்ட இலக்குகளை நோக்கி இந்த தாக்குதல் நடத்தியதாக அவர் கூறினார்.

ஈரானின் 7 ஆயிரம் இடங்களில் அமெரிக்கா தாக்குதல் நடத்தியதாக அவர் தெரிவித்தார்.

ஈரானின் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல் தற்போது 90 சதவீதம் குறைந்துள்ளதாகவும் Pete Hegseth கூறினார்.

<<<<<<>>>>>>

அமெரிக்காவில், மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கும் ஒரு லட்சம் டாலர் H1B-விசா கட்டணத்தில் இருந்து விலக்கு ஏற்படுத்துவதற்கான மசோதா கொண்டுவரப்பட்டது.

இந்த மசோதாவை தாக்கல் செய்த அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாட்டில் மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களின் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளதாக தெரிவித்தனர்.

<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

**Orleans** மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் எம் ஆர் அர்ஜுன் — ஹரிஹரன் அம்சகருணன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை **26-24, 21-14** என்ற செட் கணக்கில், ஸ்காட்லாந்தின் அலெக்சாண்டர் — **Adam Pringle** இணையை வென்றது.

----------

மும்பையில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Nirav Shetty** — **Anup Bangargi** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<<END>>>>>>**